Vaidika Pandit Sri V.Hariharan Collection, Sholinganallur, Chennai

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

SUNDARAM
E mail:marjan@arunex
www.arunexcello.com
N EXCELLO ™

CC-0.In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai



CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

ஸந்தியாவந்தன பாஷ்யம்

॥ सन्ध्यावन्दन-भाष्यम् ॥

(அனுஷ்டானப் பிரகாசிகை எனும்
உரையுடன் கூடியது)

உரை ஆசிரியர்
"அண்ணு"

ஸ்ரீராமகிருஷ்ண மடம்
மயிலாப்பூர், சென்னை 600 004

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

வெளியிடுபவர்:
தலைவர்
ஸ்ரீராமகிருஷ்ண மடம்
மயிலாப்பூர், சென்னை-4
© உரிமைப் பதிவு பெற்றது

இரண்டாம் பதிப்பு: ஆகஸ்ட் 1990
13-ஆம் பதிப்பு: டிசம்பர் 2014
2M 3C

ISBN 81-7120-273-X

இதுவரை அச்சான பிரதிகளின்
எண்ணிக்கை: 28,100

அச்சிட்டோர்:
ஸ்ரீராமகிருஷ்ண மடம் அச்சகம்
மயிலாப்பூர், சென்னை-4

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

பொருளடக்கம்

பக்கம்

குறிகளின் விளக்கம் v

முதற் பதிப்பின் முகவுரை ix

ஸந்தியாவந்தனம்—பூர்வ பாகம்

1. ஆசமனம் 3
2. கணபதி தியானம் 9
3. பிராணயாமம் 11
4. ஸங்கல்பம் 15
5. மார்ஜனம் 17
6. பிராசனம் 21
7. புனர்மார்ஜனம் 31
8. அர்க்கியப் பிரதானம் 35
9. பிராயச்சித்தார்க்கியம் 39
10. ஐக்கியானுஸந்தானம் 41
11. தேவ தர்ப்பணம் 45

ஸந்தியாவந்தனம்—உத்தர பாகம்

12. ஜப ஸங்கல்பம் 49
13. பிரணவ ஜபமும் பிராணயாமமும் . . 53
14. காயத்ரீ ஆவாஹனமும் நியாஸமும் . . 59
15. காயத்ரீ ஜபம் 65
16. காயத்ரீ உபஸ்தானம் 71
17. ஸூர்ய உபஸ்தானம் 73
18. ஸமஷ்டி அபிவாதனம் 91
19. திக்தேவதா வந்தனம் 97
20. யம வந்தனம் 99
21. ஹரிஹர வந்தனம் 101
22. ஸூர்யநாராயண வந்தனம் . . . 103

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

பக்கம்

23. ஸமர்ப்பணம் 107
24. இரக்ஷை 109

அனுபந்தம்

1. பிரம்ம யஜ்ஞம் 111
2. யஜ்ஞோபவீத தாரணம் . . . 125
3. பிராணாக்னி ஹோத்ரம் . . . 129
4. ஸமிதாதானம் 133
5. உபாகர்மம் 145

உச்சரிப்பு

க ग - கங்கை என்பதில் போல
ட ड - குடம் ,,
த द - பாதம் ,,
ப ब - இன்பம் ,,
ரு ऋ - எருது ,,
ச श - பாசம் ,,
ऽ (அ) - 'அ' தொக்கி நிற்கும்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

இப்புத்தகத்திற் குரியவர்

பெயர்:.....சர்மா.

கோத்திரம்:.....

ஸூத்திரம்:.....

நக்ஷத்திரம்:.....

ஜன்மதினம்:.....வரு.....மீ.....தேதி

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

குறிகளின் விளக்கம்

ஒ. - ஒப்பிடுக	மு. உப.-முண்டகோபநிஷத்து
கீ. - பகவத் கீதை	தை. ஆ.-தைத்திரீய ஆரண்யகம்
கட. உப.-கட உபநிஷத்து	தை. ஸ.-தைத்திரீய ஸம்ஹிதை
சா. உப.-சாந்தோக்கிய உபநிஷத்து	தை. உப.-தைத்திரீய உபநிஷத்து

ஸ்வரங்கள்

மந்திரங்களின் ஸ்வரங்கள் அனுதாத்தம், உதாத்தம், ஸ்வரிதம், ப்ரசயம் என்பவை. ஸம்ஸ்கிருத அக்ஷரங்களின் மேலுங் கீழும் முதல் மூன்று ஸ்வரங்களும் சிறு கோடுகளால் குறிக்கப்பட்டிருக்கின்றன. அவற்றை உச்சரிக்கும் முறையை வேதத்தை அத்தியயனம் செய்தவர்களிடமிருந்து தெரிந்துகொள்ள வேண்டும்.

அனுதாத்தம் — எழுத்துக்குக் கீழ் இக்குறி இருந்தால் அக்ஷரத்தின் ஸ்வரத்தை இறக்கி உச்சரிக்க வேண்டும்.

உதாத்தம் | எழுத்துக்கு மேல் இக்குறி இருந்தால் ஸ்வரத்தை மேலே தூக்கி உச்சரிக்க வேண்டும்.

ஸ்வரிதம் || எழுத்துக்கு மேல் இக்குறி இருந்தால் ஸ்வரத்தைத் தூக்கியும் நீட்டியும் உச்சரிக்க வேண்டும்.

ப்ரசயம் ஒரு அடையாளமும் இடப்படாத அக்ஷரங்களின் ஸ்வரம் ப்ரசயம். இவ்வக்ஷரங்களை நடுநிலையாக உச்சரிக்க வேண்டும்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

முதற்பதிப்பின் முகவுரை

ஒரு கட்டடம் எவ்வளவு பெரிதாகவும் அழகாகவும் இருந்தாலும் அதில் முக்கியமாகப் பயன்படுவது அதனுள் ளிருக்கும் காலியான இடம். அதுபோல் பகலும் இர வும் பெரிய செயல்களும் இன்பங்களும் நிறைந்தனவா யிருப்பினும், இரண்டிற்குமிடையில் செயலற்றிருக்க வேண்டிய நிலையொன்றுண்டு. அதுவே ஸந்தி. அது பகலையும் இரவையும் விட அதிகப் பயன் தரக்கூடியதென முன்தையோர் கண்டனர். அந்த ஸந்தியா காலத்தில் உல கச் சந்தடியினின்று விலகி, உண்ணுமலும் உறங்காமலும் உரையாடாமலும் தான் தானுகத் தனித்திருந்து, தன் னுள்ளும் புறத்தும் நின்று தானறியாமல் தன்னை இயக்கு விக்கும் பரம்பொருளை, ஒவ்வொருவனும் வழிபட வேண் டும். இதுவே ஸந்தியாவந்தனம்.

"சித்தமறியாதபடி சித்தத்தில் நின்றிலகு திவ்ய தேஜோ மயத்தைச் சிற்பரவெளிக்குள் வளர் தற்பரமதான பர தேவதையை அஞ்சலி செய்வாம்" —தாயுமானவர்

இப்பழக்கம் முதிர்ந்தால், அம்மனை நிலையில், பகலும் இரவும் ஸந்திக்கும் காலத்தில் மட்டுமன்றி ஒவ்வொரு எண்ணத்தின் முடிவிற்கும் மறு எண்ணத்தின் தொடக் கத்திற்கும், ஒவ்வொரு சொல்லின் முடிவிற்கும் மறு சொல்லின் தொடக்கத்திற்கும், ஒவ்வொரு செயலின் முடிவிற்கும் மறு செயலின் தொடக்கத்திற்கும் நடுவில் உள்ள இடைவெளி சூன்யமாயில்லாமல் ஆன்மதரிசனத் தைக் கூட்டித்தரவல்லதாய் விளங்கும். உண்மையில் உலகில் காணும் பொருள்களும், செய்யும் செயல்களும், எல்லா விவகாரங்களும் ஆன்மாவை மறைக்கவே செய்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

கின்றன. ஜபமாலையை உருட்டும்போது மணிகளிடை ஊடுருவிச் செல்லும் இழை, மணிகளில் மறைந்து, இடையிடையில் மட்டும் தோன்றுமாறுபோல், ஸூத்ராத்மா செயல்களில் மறைந்து இடையிடையில் மட்டும் மின்னல் போல் தோற்றமளிக்கிறது. "பொன்வட்டில் போன்ற உன் பிரகாச வடிவத்தால் உனக்குள்ளிருக்கும் ஸத்தியத்தின் முகம் மறைக்கப்பட்டுள்ளது. ஸத்தியத்தை நாடும் என்னுடைய பார்வைக்கு நீ அந்த மறைப்பை நீக்கியருள்வாயாக. உன் கிரணங்களைச் சுருக்கி உன் ஒளியை உள்ளே வாங்கிக்கொள். உன்னுடைய உத்தமமான மங்கள வடிவம் எதுவோ அதை நான் பார்க்கும்படி அருள்வாய்." என்று ஈசாவாஸ்ய உபநிஷத்தின் ரிஷி சூரியனை நோக்கிக் கூறுவதின் காரணம் இதுவே.

"ஓராதே ஒன்றையும் உற்றுன்னுதே—நீ முந்திப் பாராதே பார்த்தானைப் பார்."

II

இங்ஙனம் ஸந்தியாவந்தனம் செய்யக் கற்றுக்கொண்டவன் 'துவிஜன்' அல்லது இரு பிறப்பாளன் எனப்படுவான். பிறவியில் எல்லோரும் சூத்திரரே யென்றும் ஞானக்கண் திறக்கப்பெற்றுப் பிரம்மார்ப்பணமாகக் கர்மானுஷ்டானம் செய்யத்தொடங்கிய பின்னரே துவிஜர் எனப்படுவரென்றும் தர்மசாஸ்திரங்கள் கூறுகின்றன. (ஜன்மனா ஜாயதே சூத்ர: கர்மணா ஜாயதே த்விஜ:). ஒரு பறவை முட்டையாக முதலில் பிறந்தபோது குறுகிய முட்டையின் அளவே அதனுடைய உலகம்; முட்டையை உடைத்துக்கொண்டு வெளிவந்தபின்னரே புதிய தொரு பேருலகை அது காண்கிறது; இது அப்பறவையின் இரண்டாவது பிறப்பு. அவ்வாறே குறுகிய மனப்பான்மையுடன் புலன்களுக் கடிமையாகப் பிறந்த மனிதன் அகக்கண் திறக்கப்பெற்றுப் பேரானந்த வடிவான ஆன்ம ஒளியைக் காணும்போதே இருபிறப்பாளன் என்ற

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

பெயருக்கு உண்மையில் உரியவனாகிறான். பூணூலாலும் சிகையாலும் மட்டுமல்ல. 'நூலது வேதாந்தம் நுண் சிகை ஞானமாம்.'

'உபநயனம்' எனப்படுவது இவ்விரண்டாவது பிறப்பின் வாயிலாக அமைகின்றது. 'உப'-பிரம்மத்திற்குச் சமீபத்தில், 'நயனம்'-ஆசாரியன் சிஷ்யனை அழைத்துச் செல்லுதல், என 'உபநயனம்' எனும் சொல் பொருள் படும். பிராம்மணர்களும் க்ஷத்திரியர்களும் வைசியர்களும் முறையே 8, 12, 16 வயதிற்குள், காமம் மனத்தில் புகுமுன் உபநயன தீக்ஷை பெறவேண்டும் என்பது தொன்றுதொட்டு வந்த பழக்கம். வாமன மூர்த்தியாக அவதரித்த பகவானுக்கு உபநயனம் செய்வித்ததை ஸ்ரீமத் பாகவதம் அழகாக வர்ணிக்கிறது: 'சூரியதேவன் காயத்ரீ மந்திரத்தை உபதேசித்தார். பிருஹஸ்பதி தவத்தைக் காக்கும் பூணூலைக் கொடுத்தார். பிரம்மசரியத்திற்கு ரக்ஷையான மூஞ்ஜிக் கயிற்றைக் கச்யபர் இடுப்பில் கட்டினார். ஆயுளை வளர்க்கும் மான்தோலைப் பூமிதேவி கொடுத்தாள். ஓஷதிகளின் பதியான ஸோமன் பலாச தண்டத்தை யளித்தார். தாயான அதிதி கௌபீனத்தையும், மேலுலக தேவதை குடையையும், பிரம்மா கமண்டலுவையும், ஸப்தரிஷிகள் தர்ப்பையையும், ஸரஸ்வதி ஜபமாலையையும், குபேரன் பிக்ஷாபாத்திரத்தையும் அளித்தனர். உமாதேவி பிக்ஷையிட்டாள். (பிக்ஷாம் பகவதி ஸாக்ஷாத் உமா அதாத் அம்பிகா ஸதீ). இவ்வாறு உபநயனம் செய்விக்கப்பெற்ற வாமனர் பிரம்ம தேஜஸ்ஸால் பிரகாசித்தார்'. தக்கவயதில் ஒழுங்காக உபநயனம் செய்விக்கப்பெறும் ஒவ்வொரு சிறுவனும் வாமனப் பிரம்மசாரியின் திருவுருவேபோல் காட்சியளிப்பான். உபநயனத்தில் குருவானவர் சிஷ்யனை ஒரு கல்லின்மேல் காலை ஊன்றி நிற்கச் சொல்லி ஆசீர்வதிப்பதாவது: "இக்கல்லைப்போல் வலிமைகொண்ட உடலும், உறுதி படைத்த நெஞ்சும் உடையவனாக நீ இருக்கவேண்டும். உன் விரதங்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

களுக்கு ஊறு செய்பவர்களை எதிர்த்துப் போராடி, நீ விரட்டியடிக்கவேண்டும். (ஆதிஷ்ட்டேமம் அச்மானம், அச்ம இவ த்வம் ஸ்திரோ பவ | அபிதிஷ்ட்ட ப்ருதன்யத: | ஸஹஸ்வ ப்ருதனயத: ||)". மேலும் கூறுவதாவது: "நீ பிரம்மசாரியாகிவிட்டாய். ஸந்தியாவந்தனத்தையும் மற்ற கடமைகளையும் தவறாமல் செய்யவேண்டும். அறியாமையினின்று விழித்தெழுந்திரு. உறங்காதே. (ப்ரஹ்மசார்யஸி | அபோऽசான | கர்ம குரு | மா ஸ்வாப்தா: ||)".

உபநயனத்தில் அளிக்கப்படும் காயத்ரீ மந்திரோபதேசம் எல்லாவற்றிற்கும் முதன்மையானதும் சிறந்ததுமானதால் பிரம்மோபதேசம் எனப்படும். ஸ்ரீ சங்கராசாரியர் பிரபஞ்சஸாரம் எனும் நூலில் பின்வருமாறு கூறுகிறார்: "இகத்திலும் பரத்திலும் நல் வாழ்க்கையை நாடும் சிறந்த துவிஜர்களால் முறைப்படி இம்மந்திரம் ஜபித்தற்குரியது. துவிஜர்கள் எனும் சொல் பிராம்மணர்களையும் க்ஷத்திரியர்களையும் வைசியர்களையும் குறிக்கும். பரிசுத்தமான தாய் தந்தையரிடம் நற்குலத் துதித்தவர்களும் புத்திமான்களுமான துவிஜர்களால் உபநயன தீக்ஷை பெற்றதுமுதல், பிரணவத்துடனும், வியாஹ்ருதியுடனும், சிரசுடனும் கூடிய காயத்ரீ, ஸந்தியோபாஸனையாலும், பிராணயாமத்தாலும், ஜபத்தாலும், தியானத்தாலும் அவரவர் ஸம்பிரதாயத்தின்படி தினந்தோறும் உபாசிக்கப்படவேண்டும். (ஜப்ய: ஸ்யா - திஹ - பரலோக - ஸித்தி - காமைர்-மந்த்ரோऽயம் மஹித - தரைர் - த்விஜைர் - யதாவத் | பூதேவா நரபதயஸ்-த்ருதீய வர்ண: ஸம்ப்ரோக்தா த்விஜ-வசனேன தத்ர பூய: || தேஷாம் சுத்த - குலத்வயோத்த - மஹஸாம் ஆரப்ய தந்து-க்ரியாம், தார-வ்யாஹ்ருதி ஸம்யுதா ஸஹஸிரா காயத்ர்யுபாஸ்யா பரா | ஸந்த்யோபாஸனயா ஜபேன ச ததா ஸ்வாத்யாய - பேதைரபி, ப்ராணயாம - விதானத: ஸுமதிபிர்-த்யானேன நித்யம் த்விஜை: || (பிரபஞ்ச ஸாரம் 28. 3-4).

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

III

ஸந்தியாவந்தனத்தின் முக்கியமான அம்சங்கள் மூன்று: (1) அர்க்கியப்ரதானம் (2) பிராணயாமம் (3) காயத்ரீ ஜபம். அர்க்கியப் பிரதானத்தின் கருத்தை விளக்க ஒரு கதை வேதத்திலேயே கூறப்படுகிறது. சூரியனை எதிர்த்து அரக்கர்கள் அன்றுடம் போராடுகின்றனர் என்றும், இரு பிறப்பாளர் காயத்ரீ மந்திரத்தை ஜபித்து விடும் அர்க்கியம் வஜ்ராயுதம்போல் வலிபடைத்து அரக்கர்களை முறியடிக்கிறதென்றும் அது சிலேடையாகக் கூறுகிறது. (ப்ரஹ்மவாதின: பூர்வாபிமுகா: ஸந்த்யாயாம் காயத்ர்-யாபி - மந்த்ரிதா ஆப ஊர்த்வம் விக்ஷிபந்தி | தா ஏதா ஆபோ வஜ்ரீ பூத்வா தானி ரக்ஷாꣳஸி மந்தேஹாருணேத்வீபே ப்ரக்ஷிபந்தி ||). அஞ்ஞானமே அரக்கர் படை. ஞானமே சூரியன். போர்க்களம் மனிதனுடைய மன வெளி. இப்போரில் வெற்றி காண உதவும் பிரம்மாஸ்திரம் போன்றது காயத்ரீ மந்திரம். அரக்கர்படை திரும்பத் திரும்ப வந்து அகவெளியில் சூழ்ந்துகொள்வதால் தமக்காகவும் பிறர்க்காகவும் அறிவாளிகள் அன்றுடம் அறியாமையுடன் போர் புரிந்துகொண்டே இருக்கவேண்டும். (தஸ்மாத் ஸர்வேஷு காலேஷு மாமனுஸ்மர யுத்ய ச || கீதை, 8. 7) தினந்தோறும் சாப்பிடுவதை மறந்தாலும் ஸந்தியாவந்தனத்தை மறக்கக்கூடாது. 'ஸந்தியாவந்தனம் செய்தால் தான் சாப்பாடு' என்று சொல்லும் தாய்மார்கள் இன்றும் உண்டு.

ஸந்தியாவந்தனத்தின் ஜீவநாடியாயிருப்பது அர்க்கியப் பிரதானம். மார்ஜனம், பிராசனம் முதலிய பகுதிகள் அஷ்டாங்க யோகத்தின் முதற்படிகளான இயமமும் நியமமும் போன்று பூர்வாங்கங்களாயமைகின்றன. புறத்தூய்மையுடன் அகத்தூய்மையும் வேண்டற்பாலது என்பது இம்மந்திரங்களின் கருத்தினின்று தெளிவாகும். இயமத்தைப் பற்றித் திருமந்திரம் பின்வருமாறு கூறுகிறது.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

கொல்லான் பொய்கூரான் களவிலான் எண்குணன்
நல்லான் அடக்கமுடையான் நடுச்செய்ய
வல்லான் பகுத்துண்பான் மாசிலான் கட்காமம்
இல்லா னியமத்திடையின் நின்றானே.

யோகத்தின் மூன்றாவது நான்காவது படிகளாகிய ஆஸனமும் பிராணயாமமும் ஸந்தியாவந்தனத்தில் ஜபத்தின் பூர்வாங்கங்களா யமைந்திருப்பதைக் காண்கிறோம். வெளிநாட்டமுள்ள இந்திரியங்களை வசப்படுத்தும் பிரத்தியாஹாரமும், தியானம், தாரணை, ஸமாதி என்னும் படிகளும் ஜபத்தில் அடக்கம்.

உச்சரிக்கும் மந்திரங்களின் உட்கருத்துக்களை உணர்ந்து கொண்டு உபாசனைகளைச் செய்தால் தான் அவை உண்மையான பயன் அளிப்பனவாகும். சாந்தோக்கிய உபநிஷத்துக் கூறுவதாவது: 'ஓங்கார உச்சாரணத்துடன் அறிந்தவர் அறியாதவர் என்ற இருவகையினரும் கர்மங்களைச் செய்கிறார்கள். அறிவும் அறியாமையும் முற்றும் வேறன்றோ? ஆகையால் தத்துவ ஞானத்துடனும் சிரத்தையுடனும் யோகமுறையை யனுசரித்தும் எது செய்யப்படுகிறதோ அதுவே மிகுந்த வீரியமுடையதாகும் என்பது தெளிவு. (தேநோபௌ குருதோ யச்சைத-தேவம் வேத யச்ச ந வேத | நாநா து வித்யா சா வித்யா ச யதேவ வித்யயா கரோதி ச்ரத்தயோபநிஷதா ததேவ வீர்யவத்-தரம் பவதீதி || சா. உப. 1. 1. 10)'. நெருப்பின்றி விறகு எப்படித் தானாகவே எரியாதோ அப்படி ஞானமின்றிக் கர்மம் பயன் தராது. ஆதலின் இந்நூலில் ஸந்தியாவந்தனத்தின் உட்கருத்தை உரையாலும், உவமை வாக்கியங்களாலும் கூடியவரை விளக்குவதற்கு முயன்றுள்ளோம்.

எல்லாக் கர்மங்களுக்கும், எல்லா உபாஸனைகளுக்கும், எல்லா மந்திரங்களுக்கும் ஆணிவேர் போன்றிருப்பது

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

ஸந்தியாவந்தனம். வெவ்வேறு திசைகளிலிருந்து ஒரே ஊரை நோக்கிவரும் பாதைகள்போல் எல்லாச் சமயங்களும் இங்கு ஒன்றுபடுகின்றன. 'ஒன்றுகக் காண்பதே காட்சி.' சைவரோ, வைஷ்ணவரோ, சாக்தரோ, வடநாட்டாரோ, தென் நாட்டாரோ யாராயினும் ஸந்தியாவந்தனத்தில் ஜபிக்கும் மந்திரம் ஒன்றே. இதுவே நல்லோர்கள் பெற்று நமக்கு அளித்துள்ள அழிவிலாச் செல்வம். (ஸா ஹி ஸ்ரீ-ரம்ருதா ஸதாம் ||).

IV

இச்சிறு நூலில் முக்கியமாக யஜுர்வேதிகளின் அனுஷ்டான முறையே பின்பற்றப்பட்டிருக்கிறது. எனினும் ஆங்காங்கு ரிக்வேதிகளின் அனுஷ்டானத்திலும் ஸாமவேதிகளின் அனுஷ்டானத்திலும் உள்ள வேற்றுமைகள் காட்டப்பட்டிருக்கின்றன. மூலம் முதலில் ஸம்ஸ்கிருத எழுத்திலும், அதனடியில் தமிழ் எழுத்திலும், பின்னர் பதவுரையும் வலது பக்கங்களில் அச்சிடப்பட்டிருக்கின்றன. இடது பக்கங்களில் 'அனுஷ்டானப் பிரகாசிகை' எனும் உரை அச்சிடப்பட்டுள்ளது. இதில் முதலில் ஒவ்வொரு மந்திரத்தின் பிரயோகமும், பின்னர் வியாக்கியானக் குறிப்புகளும் கொடுக்கப்பட்டுள்ளன. இவற்றில் தர்மசாஸ்திரங்கள், உபநிஷதங்கள், பகவத்கீதை, ஆழ்வார்கள், நாயன்மார்களின் அருள்மொழிகள் முதலியவற்றினின்று மேற்கோள்களும் உவமைகளும் ஒப்பிட்டுச் சிந்தித்தற்குறிய முறையில் எடுத்துக் காட்டப்பட்டிருக்கின்றன.

இச் சிறந்த கைங்கரியத்தில் என்னை ஊக்குவித்தவரும், ஸ்ரீ கணேசரின் பரிபூர்ண அனுக்ரஹத்தைப் பெற்றவரும் கணேஷ் கம்பெனிக்குடையவருமான பிரம்மஸ்ரீ எஸ். சுப்பையா அவர்களுக்கும், இந்நூலின் அச்சுத்தாள்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

கொல்லான் பொய்கூறான் களவிலான் எண்குணன்
நல்லான் அடக்கமுடையான் நடுச்செய்ய
வல்லான் பகுத்துண்பான் மாசிலான் கட்காமம்
இல்லா னியமத்திடையின் நின்றானே.

யோகத்தின் மூன்றாவது நான்காவது படிகளாகிய ஆஸனமும் பிராணயாமமும் ஸந்தியாவந்தனத்தில் ஜபத்தின் பூர்வாங்கங்களா யமைந்திருப்பதைக் காண்கிறோம். வெளிநாட்டமுள்ள இந்திரியங்களை வசப்படுத்தும் பிரத்தியாஹாரமும், தியானம், தாரணை, ஸமாதி என்னும் படிகளும் ஜபத்தில் அடக்கம்.

உச்சரிக்கும் மந்திரங்களின் உட்கருத்துக்களை உணர்ந்து கொண்டு உபாசனைகளைச் செய்தால் தான் அவை உண்மையான பயன் அளிப்பனவாகும். சாந்தோக்கிய உபநிஷத்துக் கூறுவதாவது: 'ஓங்கார உச்சாரணத்துடன் அறிந்தவர் அறியாதவர் என்ற இருவகையினரும் கர்மங்களைச் செய்கிறார்கள். அறிவும் அறியாமையும் முற்றும் வேறன்றோ? ஆகையால் தத்துவ ஞானத்துடனும் சிரத்தையுடனும் யோகமுறையை யனுசரித்தும் எது செய்யப்படுகிறதோ அதுவே மிகுந்த வீரியமுடையதாகும் என்பது தெளிவு. (தேநோபௌ குருதோ யச்சைத-தேவம் வேத யச்ச ந வேத | நாநா து வித்யா சா வித்யா ச யதேவ வித்யயா கரோதி ச்ரத்தயோபநிஷதா ததேவ வீர்யவத்-தரம் பவதீதி || சா. உப. 1. 1. 10)'. நெருப்பின்றி விறகு எப்படித் தானாகவே எரியாதோ அப்படி ஞானமின்றிக் கர்மம் பயன் தராது. ஆதலின் இந்நூலில் ஸந்தியாவந்தனத்தின் உட்கருத்தை உரையாலும், உவமை வாக்கியங்களாலும் கூடியவரை விளக்குவதற்கு முயன்றுள்ளோம்.

எல்லாக் கர்மங்களுக்கும், எல்லா உபாஸனைகளுக்கும், எல்லா மந்திரங்களுக்கும் ஆணிவேர் போன்றிருப்பது

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

ஸந்தியாவந்தனம். வெவ்வேறு திசைகளிலிருந்து ஒரே ஊரை நோக்கிவரும் பாதைகள்போல் எல்லாச் சமயங்களும் இங்கு ஒன்றுபடுகின்றன. 'ஒன்றுகக் காண்பதே காட்சி.' சைவரோ, வைஷ்ணவரோ, சாக்தரோ, வடநாட்டாரோ, தென் நாட்டாரோ யாராயினும் ஸந்தியாவந்தனத்தில் ஜபிக்கும் மந்திரம் ஒன்றே. இதுவே நல்லோர்கள் பெற்று நமக்கு அளித்துள்ள அறிவிலாச் செல்வம். (ஸா ஹி ஸ்ரீ-ரம்ருதா ஸதாம் ||).

IV

இச்சிறு நூலில் முக்கியமாக யஜுர்வேதிகளின் அனுஷ்டான முறையே பின்பற்றப்பட்டிருக்கிறது. எனினும் ஆங்காங்கு ரிக்வேதிகளின் அனுஷ்டானத்திலும் ஸாமவேதிகளின் அனுஷ்டானத்திலும் உள்ள வேற்றுமைகள் காட்டப்பட்டிருக்கின்றன. மூலம் முதலில் ஸம்ஸ்கிருத எழுத்திலும், அதனடியில் தமிழ் எழுத்திலும், பின்னர் பதவுரையும் வலது பக்கங்களில் அச்சிடப்பட்டிருக்கின்றன. இடது பக்கங்களில் 'அனுஷ்டானப் பிரகாசிகை' எனும் உரை அச்சிடப்பட்டுள்ளது. இதில் முதலில் ஒவ்வொரு மந்திரத்தின் பிரயோகமும், பின்னர் வியாக்கியானக் குறிப்புகளும் கொடுக்கப்பட்டுள்ளன. இவற்றில் தர்மசாஸ்திரங்கள், உபநிஷதங்கள், பகவத்கீதை, ஆழ்வார்கள், நாயன்மார்களின் அருள்மொழிகள் முதலியவற்றினின்று மேற்கோள்களும் உவமைகளும் ஒப்பிட்டுச் சிந்தித்தற்குறிய முறையில் எடுத்துக் காட்டப்பட்டிருக்கின்றன.

இச் சிறந்த கைங்கரியத்தில் என்னை ஊக்குவித்தவரும், ஸ்ரீ கணேசரின் பரிபூர்ண அனுக்ரஹத்தைப் பெற்றவரும் கணேஷ் கம்பெனிக்குடையவருமான பிரம்மஸ்ரீ எஸ். சுப்பையா அவர்களுக்கும், இந்நூலின் அச்சுத்தாள்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

கலைப் பரிசோதித்துத் திருத்திக்கொடுத்துதவிய எனது நண்பர் பிரம்மஸ்ரீ வழுத்தூர் ராஜகோபால சர்மா அவர்களுக்கும், இந்நூலைப் பயன்படுத்தப்போகும் அன்பர்களுக்கும் என் நன்றி உரித்தாகும்.

ஸ்ரீ ராமகிருஷ்ண வித்யாலயம்,
தியாகராய நகர், சென்னை
மன்மத ஐப்பசி பங்குனி உத்திரம்
26 - 3 - 1956

உரையாசிரியர்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

ॐ

गायत्रीं छन्दसां माता
इदं ब्रह्म जुषस्व नः ॥

காயத்ரீம் சந்தஸாம் மாதா
இதம் ப்ரஹ்ம ஜுஷஸ்வ நः ॥

காயத்ரீ எனப் பிரஸித்தமான வேதமாதா
நம்முடைய இந்த மந்திரவடிவான
ஸ்துதியை அங்கீகரித்து
அருள்புரிய வேண்டும்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

॥ श्रीः ॥

॥ सन्ध्या-वन्दनम् ॥

(पूर्वभागः)

आचमनम् ॥ १ ॥

अच्युताय नमः ।
अनन्ताय नमः ।
गोविन्दाय नमः ॥

॥ ஸ்ரீ: ॥

ஸந்த்யா - வந்தனம்

(பூர்வ பாக:)

ஆசமனம் ॥ 1 ॥

அச்யுதாய நம: ।
அனந்தாய நம: ।
கோவிந்தாய நம: ॥

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

॥ ஸ்ரீ: ॥

ஸந்த்யாவந்தன

அனுஷ்டானப் பிரகாசிகை

பிரம்மாவின் தியானத்தின் முதிர்ந்த பயனுய்த் தோன்றிய பரதேவதைக்கு 'ஸந்த்யா' என்று பெயர். அவளை இருதய ஆகாசத்திலும் பேராகாசத்திலும் அன்றூடம் உதித்து அஸ்தமிக்கும் சூரியனிடத்திலும் வந்தனம் செய்தல் ஸந்த்யாவந்தனம். (ப்ரஹ்மணோ ஹ்யாயதோ யஸ்மாத் ஸம்யக் ஜாதா வராங்கனா। அத: ஸந்த்யேதி லோகேऽஸ்மின் அஸ்யா: க்யாதிர்-பவிஷ்யதி ॥).

மும்மூர்த்திகளின் முழுச் சக்தியும் திரண்டவடிவாய் நின்று உலகனைத்தையும் தோற்றுவித்து ஆட்டுவிப்பதாயினும் மாயைக்கப்பால் நிஷ்கலமாயுள்ள எந்தப் பரதத்துவமுண்டோ அதுவே ஸந்த்யா. (யா ஸந்த்யா ஸா ஜகத்ஸூதி: மாயாதீதா ஸுநிஷ்கலா। ஜ்வரீ கேவலா சக்தி: மூர்த்தித்ரய ஸமுத்பவா ॥ (போதாயன:). தினந்தோறும் ஸந்தியா தேவியை உபாஸிக்கவேண்டும். (அஹரஹ: ஸந்த்யா-முபாஸீத). உதிக்கும்போதும் அஸ்தமிக்கும்போதும் சூரியனை 'இவனே பிரம்மம்' என்று தியானம் செய்யும் வித்வானுகிய பிராஹ்மணன் எல்லா நன்மைகளையும் அடைகிறான். (உத்யந்த-மஸ்தம்-யந்தம் ஆதித்ய-மபித்யாயன் குர்வன் ப்ராஹ்மணோ வித்வான் ஸகலம் பத்ரமச்னுதே ॥ அஸாவாதித்யோ ப்ரஹ்மேதி ॥).

ஸந்தியாவந்தனம் செய்யாதவன் எப்போதும் அசுத்தமானவன். எக்கருமத்துக்கும் தகுதியில்லாதவன். (ஸந்த்யா ஹீனோऽசுசிர் நித்யம் அனர்ஹ: ஸர்வகர்மஸு). பிறப்பிறப்புத் தீட்டுக் காலங்களிலும் பிராஹ்மணன் பிராணயாமமின்றி மனத்தால் மந்திரங்களை உச்சரித்து ஸந்தியாவந்தனத்தை விட்டுவிடாமல் செய்யவேண்டும்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

(ஸுதகே ம்ருதகே சைவ ஸந்த்யாகர்ம ந ஸந்த்யஜேத் | மன ஸோச்சாரயேன் மந்த்ரான் ப்ராணயாமம் ருதே க்விஜ: ||).

ஸந்தியாகாலத்தில் தூங்குவதும் சாப்பிடுவதும் படிப்பதும் கூடாது.

(1) ஆசமனம்

'அச்யுதாய நம:, அனந்தாய நம', கோவிந்தாய நம:' எனும் இம்மந்திரம் உடலிலும் உள்ளத்திலும் உறையும் எல்லா வியாதிகளையும் போக்கவல்லது. இதற்கு 'நாமத்ரயீ-வித்யா' என்று பெயர். (மஹாவ்யாஹ்ரி-ப்ரசமனீ நாமத்ரயீ-வித்யா).

ஓ. அச்யுதானந்த-கோவிந்த-நாமோச்சாரண-பேஷஜாத்|-நச்யந்தி ஸகலா ரோகா: ஸத்யம் ஸத்யம் வதாம்யஹம் ||

பிரயோகம்—ஆசமனம் கிழக்கு நோக்கியோ வடக்கு நோக்கியோ செய்யவேண்டும். மேற்கு நோக்கியும் தெற்கு நோக்கியும் செய்யக்கூடாது. கைகள் முழந்தாள்களுக்கிடையில் அடங்கியிருக்கும்படி குந்திட்டு உட்கார்ந்து செய்ய வேண்டும். (நாசாமே-தாஸனஸ்-தாங்க்ரிர்-ந பத்தாஸன ஏவ வா | ந ப்ரஸாரிதபாதோ வா பஹிர்-ஜானு-கரோபி வா | முக்தாங்குஷ்ட-கனிஷ்டாப்யாம் த்ரி: பிபேத் ப்ரஹ்ம-தீர்த்தத: ||) சுண்டு விரலையும் கட்டை விரலையும் விட்டு மற்றவிரல்களைச் சற்று வளைத்தால் ஏற்படும் உள்ளங்கைக் குழிவில் சிறிது சிறிதாகத் தீர்த்தத்தை ஏந்தி உட்கொள்ள வேண்டும். மூன்று முறை அங்ஙனம் ஆசமனம் செய்தபின் இரு முறை கை அலம்பவேண்டும். (த்ரிராசாமேத் | க்வி: பரிம்ருஜய ஸக்ரு-துபஸ்ப்ருச்ய |). பவித்திரம் அணிந்திருந்தால் பவித்திரத்தைக் கழற்றிக் காதில் வைத்துக் கொண்டு ஆசமனம் செய்துவிட்டுப் பின் அதை மீண்டும் அணிந்துகொள்ள வேண்டும். கேசவ, நாராயண என்ற பன்னிரண்டு நாமங்களையும் சொல்லிக் கண் காது முதலிய உறுப்புக்களைத் தொட்டு அனைத்தையும் பரமாத்மாவின் பணிக்கு உரியனவாக்குக. ஐந்து இந்திரியங்களும் உள்முகப்பட்டால் ஆனந்தம் தானே உதிக்கும்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

பார்ப்பா னகத்திலே பாற்பசு வைந்துண்டு
மேய்ப்பாரு மின்றி வெறித்துத் திரிவன
மேய்ப்பாரு முண்டாய் வெறியு மடங்கினல்
பார்ப்பான் பசுவைந்தும் பாலாச் சொரியுமே.

—திருமந்திரம், 343

கட்டைவிரலும் வாயும் அக்னியின் ஸ்தானமாகையால் 'கேசவ நாராயண' என்று கட்டைவிரலால் வலது இடது கன்னங்களையும்; பவித்திர விரலும் கண்களும் சூரியனுடைய ஸ்தானமாகையால் 'மாதவ, கோவிந்த' என்று பவித்திர விரலால் கண்களையும்; ஆள்காட்டி விரலும் நாசியும் வாயுவின் ஸ்தான மாகையால் 'விஷ்ணே மதுஸூதன' என்று ஆள்காட்டியால் நாசித்துவாரங்களையும்; சுண்டுவிரலும் காதுகளும் இந்திரனுடைய ஸ்தானமாகையால் 'த்ரிவிக்ரம வாமன' என்று சுண்டு விரலால் காதுகளையும்; நடுவிரலும் தோளும் பிரஜாபதியின் ஸ்தான மாகையால் 'ஸ்ரீதர ஹ்ருஷீகேச' என்று நடுவிரலால் தோள்களையும்; உள்ளங்கையும் இருதயமும் உச்சந்தலையும் முறையே தொட்டு அறிவுறுத்திக் கொள்ள வேண்டும். (ஓ. அங்குஷ்ட்டோऽக்னிரிதி-க்யாத: ப்ரோக்தா வாயு: ப்ரதேசினீ | அனாமிகா ததா ஸூர்ய: கனிஷ்ட்டா மகவா ஸ்ம்ருதா || ப்ரஜாபதிர் மத்யமா து ஜ்ஞேயா சுத்திமபீப்ஸதா ||).

வியாக்கியானக் குறிப்பு—

ஓ. விப்ரோ வ்ருக்ஷஸ் - தஸ்ய மூலம் ஹரி ஸந்த்யா |
மூலேச்சின்னே நைவ புஷ்பம் பலம் வா ||

ஓ. ஸந்த்யா ஸ்நானம் ஜபோ ஹோமோ தேவதானாஞ்ச பூஜனம் ||
ஆதித்யம் வைச்வதேவஞ்ச ஷட்கர்மாணி தினே தினே ||

ஓ. ருஷயோ தீர்க்க-ஸந்த்யத்வாத் தீர்க்க-மாயுரவாப்னுயு: |
ப்ரஜ்ஞாம் யசச்ச கீர்த்திஞ்ச ப்ரஹ்மவர்ச்சஸ-மேவ ச ||

—மனு: 4.94

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

ஆசமனம்

केशव । नारायण । माधव । गोविन्द । विष्णो । मधुसूदन ।
त्रिविक्रम । वामन । श्रीधर । हृषीकेश । पद्मनाभ । दामोदर ॥

கேசவ, நாராயண, மாதவ, கோவிந்த, விஷ்ணோ, மதுஸூதன. த்ரிவிக்ரம, வாமன, ஸ்ரீதர, ஹ்ருஷீகேச, பத்மநாப, தாமோதர ॥

ஆந்திரபாடமும் ரிக்வேதிகளின் பாடமும்—'கேசவ, நாராயண, மாதவ, கோவிந்த' என்று ஆசமனம்.

'விஷ்ணோ, மதுஸூதன, த்ரிவிக்ரம, வாமன, ஸ்ரீதர, ஹ்ருஷீகேச, பத்மநாப, தாமோதர, ஸங்கர்ஷண, வாஸுதேவ, ப்ரத்யும்ன, அநிருத்த, புருஷோத்தம, அதோக்ஷஜ, நாரஸிம்ஹ, அச்யுத, ஜனார்த்தன, உபேந்த்ர, ஹரே, ஸ்ரீக்ருஷ்ண,' என்று அவயவங்களை ஸபர்சித்தல்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

பதவுரை

(1) ஆசமனம்—அச்சுதனுக்கு நமஸ்காரம். அனந்தனுக்கு நமஸ்காரம். கோவிந்தனுக்கு நமஸ்காரம்.

கேசவா, நாராயணா, மாதவா, கோவிந்தா, விஷ்ணோ, மதுஸூதனா, த்ரிவிக்ரமா, வாமனா, ஸ்ரீதரா, ஹ்ருஷீகேசா, பத்மநாபா, தாமோதரா! உன்னைப் பன்னிரு திருநாமங்களால் போற்றி என் இந்திரியங்களனைத்துக்கும் ரக்ஷை இடுகின்றேன்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

(2) கணபதி தியானம்

பிரயோகம்—'சுக்லாம்பரதரம்' எனும் மந்திரத்தைச் சொல்லி மஹாகணபதியைத் தியானித்துச் சிரஸிலுள்ள அமிருதம் எல்லா நாடிகளிலும் இறங்கிப் பாய்வதாக எண்ணிச் சிரத்தின் இருபுறமும் முஷ்டிகளால் ஐந்து முறை மெதுவாகக் குட்டிக் கொள்க. தலையில் குட்டிக் கொள்ளுதல் கணபதி ஆராதனையில் விசேஷமான அம்சம்.

ஓ. ஐந்து கரத்தனை யானை முகத்தனை
இந்து விளம்பிறை போலு மெயிற்றனை
நந்தி மகன்றனை ஞானக் கொழுந்தினை
புந்தியில் வைத்தடி போற்று கின்றேனே.

—திருமூலர் திருமந்திரம் : விநாயகர் காப்பு

வாக்குண்டாம் நல்ல மனமுண்டாம் மாமலராள்
நோக்குண்டாம் மேனி நுடங்காது—பூக்கொண்டு
துப்பார் திருமேனித் தும்பிக்கையான் பாதம்
தப்பாமற் சேர்வார் தமக்கு.

—ஔவையார்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

गणपति-ध्यानम् ॥ २ ॥

शुक्लाम्बरधरं विष्णुं शशिवर्णं चतुर्भुजम् ।
प्रसन्नवदनं ध्यायेत् सर्व-विघ्नोपशान्तये ॥

கணபதி-த்யானம் ॥ 2 ॥

சுக்லாம்பரதரம் விஷ்ணும்
சசிவர்ணம் சதுர்ப்புஜம் ।
ப்ரஸன்ன-வதனம் த்யாயேத்
ஸர்வ-விக்னோப-சாந்தயே ॥

(2) கணபதி தியானம்—(விஷ்ணும்) எங்கும் நிறைந்தவரும்—எனினும் அன்பர்க்குகந்த வடிவம் ஏற்பவரும், (சுக்லாம்பரதரம்) வெண்மையான ஆடை உடுத்தவரும் (சசிவர்ணம்) நிலவு போன்ற ஒளியுள்ளவரும் (சதுர்ப்புஜம்) நான்கு கைகளுள்ளவரும் (ப்ரஸன்ன-வதனம்) ஆனந்தம் பொங்கும் முகமண்டலத்தை யுடையவரும்—ஆகிய கணபதியை (ஸர்வ-விக்ன-உபசாந்தயே) எல்லா இடையூறுகளும் விலகுவதற்காக (த்யாயேத்) தியானம் செய்ய வேண்டும்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

(3) பிராணயாமம்

பிரயோகம்—ஆள்காட்டி விரலியும் நடுவிரலியும் மடக்கிக் கட்டைவிரல் பவித்திர விரல்களால் மூக்கை இருபுறமும் தொட்டுக்கொண்டு வலது பக்கம் அழுத்தி இடது பக்கம் மெதுவாக மூச்சை இழுத்துப் பின் இருபுறமும் அழுத்தி மூச்சை நிறுத்தி முடிவில் வலது பக்கம் மெதுவாக மூச்சை விடவேண்டும். இழுப்பது 'பூரகம்', நிறுத்துவது 'கும்பகம்', விடுவது 'ரேசகம்' எனப்படும். பூரக-கும்பக-ரேசகத்தின் கால அளவை 1: 3: 2 என்ற விகிதத்தில் இருத்தல் சிறந்தது. பூரக - கும்பகம் - ரேசக மூன்றும் சேர்ந்தது ஒரு பிராணயாமம். 'ஓம் பூ:' முதல் 'தியாயோ ந: ப்ரசோதயாத்' வரை ஸ்மரித்துக்கொண்டு பூரகமும்; 'ஓமாபோஜ்யோதி ரஸோ' விலிருந்து தொடங்கி இரண்டாவது முறை 'ஓம் பூ: - ஓம் புவ: ... பூர்ப்புவஸ்ஸுவ ரோம்' முடிய ஸ்மரித்துக் கும்பகமும்; மூன்றும் முறை 'ஓம் பூ:' முதல் முடிவுவரை மந்திரத்தை ஸ்மரித்து ரேசகமும் செய்து பழகினால் 1: 3: 2 என்ற கால விகிதம் சரியாக வரும்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

प्राणायामः ॥ ३ ॥

ओं भूः । ओं भुवः । ओꣳ सुवः । ओं महः ।
ओं जनः । ओं तपः । ओꣳ सत्यम् ॥
ओं तत् सवितुर्वरेण्यं भर्गो देवस्य धीमहि ।
धियो यो नः प्रचोदयात् ॥
ओमापो-ज्योती-रसोऽमृतं-ब्रह्म भूर्भुवस्सुवरोम् ॥

ப்ராணயாம: ॥ 3 ॥

ஓம் பூ: । ஓம் புவ: । ஓꣳஸுவ: । ஓம் மஹ: ।
ஓம் ஜன: । ஓம் தப: । ஓꣳ ஸத்யம் ॥
ஓம் தத் ஸவிதுர்-வரேண்யம் பர்க்கோ தேவஸ்ய
தீமஹி ।
தியோ யோ ந: ப்ரசோதயாத் ॥
ஓமாபோ ஜ்யோதீ ரஸோ ऽம்ருதம் ப்ரஹ்ம
பூர்ப்-புவஸ்-ஸுவ-ரோம் ॥

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

வியாக்கியானக் குறிப்பு—

ஓ. ஸ-வ்யாஹ்ருதிம் ஸ-ப்ரணவாம் காயத்ரீம் சிரஸா ஸஹ।
த்ரி: படே-தாயத: ப்ராண: ப்ராணயாம: ஸ உச்யதே ॥
—அம்ருதநாதோபநிஷத்

ஓ. வாமத்திலீரெட்டு மாத்திரை பூரித்தே
ஏமுற்ற முப்பத்திரண்டு மிரேசித்துக்
காமுற்ற பிங்கலிக் கண்ணுக விவ்விரண்டு
ஓமத்தா லெட்டெட்டுக் கும்பிக்க உண்மையே.

ஓ. ஆபோ ஜ்யோதீ ரஸ இதி ஸோமாக்ன்யோஸ்-தேஜ உச்யதே।
ததாத்மகம் ஜகத்-ஸர்வம் ரஸஸ் தேஜோத்வயம் யுதம் ॥
அம்ருதம் த-தநாசித்வாத் ப்ரஹ்மத்வாத் ப்ரஹ்ம உச்யதே ॥
யதாநந்தாத்மகம் ப்ரஹ்ம ஸத்ய-ஜ்ஞாநாதி-லக்ஷணம் ॥
தத்-பூர்ப்புவ: ஸ்வரித்யுக்தம் ஸோஹமித்-யோமுதாஹ்ருதம்।
ஏதத்து வேதஸாரஸ்ய சிரஸ்த்வாத் சிர உச்யதே ॥
—பிரபஞ்சஸாரம் (சங்கரர்) 28. 29-31

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

(3) **பிராணயாமம்**—(மூச்சின் ஆட்சி) : (ஓம் பூ:) ஓங்காரமே பூலோகம், (ஓம் புவ:) ஓங்காரமே புவர்லோகம், (ஓம் ஸுவ:) ஓங்காரமே ஸுவர்லோகம், (ஓம் மஹ:) ஓங்காரமே மஹர்லோகம் (ஓம் ஜன:) ஓங்காரமே ஜனலோகம் (ஓம் தப:) ஓங்காரமே தபோலோகம் (ஓம் ஸத்யம்) ஓங்காரமே ஸத்தியலோகம். (ஓம்) ஓங்காரப் பொருளான (ய:) எந்தப் பரமாத்மா (ந:) நம்முடைய (தியய:) புத்தி சக்திகளை (ப்ரசோதயாத்) தூண்டுகிறாரோ (தத்) அந்த (ஸவிது:) அனைத்தையும் படைக்கிறவரான (தேவஸ்ய) பகவானுடைய (வரேண்யம்) சிறந்த (பர்க்க:) ஜோதிஸ்வரூபத்தை (தீமஹி) தியானிப்போம். (ஓம்) ஓங்காரமே (ஆப:) ஜலமும் (ஜ்யோதி:) ஒளியும் (ரஜ:) ரஸம் பொருந்திய அன்னத்தையளிக்கும் பூமியும் (அம்ருதம்) உயிருக்கு ஆதாரமான வாயுவும் (ப்ரஹ்ம) எங்கும் பரந்த ஆகாசமும். (பூர்ப்-புவஸ்-ஸுவ-ரோம்) பூ: புவ: ஸுவ: என்ற வியாஹ்ருதிகள் குறிப்பிடும் மனம் புத்தி அஹங்காரம் என்ற தத்துவங்களும் ஓங்காரமே.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

(4) ஸங்கல்பம்

பிரயோகம்—பிராணயாமத்துக்குப்பின் ஸங்கல்பம் செய்து தான் எக்கருமத்தையும் ஆரம்பிக்கவேண்டும். ஸங்கல்பத்திற்கு இடது கை கீழும் வலது கை மேலுமாக வலது துடைமீது வைத்துக்கொள்ளவும்.

வியாக்கியானக்குறிப்பு—ஒ. ஸங்கல்பம் மனதிலும் பெரிது. எப்போது ஒருவன் ஸங்கல்பிக்கிறானே அப்போது தெளிவுற யோசித்துத் தீர்மானிக்கிறான்; தீர்மானத்தைப் பேச ஆரம்பிக்கிறான்; பேச்சுப் பெயர் வடிவாகிறது; பெயர் வடிவில் மந்திரங்கள் ஒடுங்குகின்றன. மந்திரங்களில் கருமங்கள் ஒடுங்குகின்றன. (ஸங்கல்போ வாவ மனஸோ பூயான் யதா வை ஸங்கல்பயதே அத மனஸ்யதி, அத வாச மீரயதி, தாமு நாம்னீரயதி, நாம்னி மந்த்ரா ஏகம் பவந்தி, மந்த்ரேஷு கர்மாணி.—சா. உப. 7. 4. 1.).

ஸங்கல்பத்தின் வலிமை—ஒ. பொய்க்குங் கவலைப் பகை போக்கி முன்னோன் அருளைத் துணையாக்கி, எய்க்கும் நெஞ்சை வலியுறுத்தி உடலை இரும்புக் கிணையாக்கிப் பொய்க்கும் கலியை நான் கொன்று பூலோகத்தார்கள் முன்னே, மெய்க்கும் கிருதயுகத்தினையே கொணர்வேன் தெய்வ விதியிஃதே —பாரதியார்

ஒ. கௌதம புத்தர் தியானத்தில் போதிவிருக்ஷத்தின் அடியில் அமர்ந்தபோது செய்துகொண்ட ஸங்கல்பம்:

இஹாஸனே சுஷ்யது மே சரீரம்
த்வ-சுஸ்தி மாம்ஸானி லயம் ப்ரயாந்து |
அப்ராப்ய போதம் பஹுகல்ப-துர்லபம்
நைவாஸனாத் காயமிதம் சலிஷ்யதி ||

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

संकल्पः ॥ ४ ॥

ममोपात्त-समस्त-दुरित-क्षय-द्वारा श्री-परमेश्वर-प्रीत्यर्थं[1] प्रातः सन्ध्या-मुपासिष्ये ॥ (माध्यान्हिकं करिष्ये ॥ सायं सन्ध्या-मुपासिष्ये ॥)

ஸங்கல்பः ॥ 4 ॥

மமோபாத்த-ஸமஸ்த-துரித-க்ஷய-த்வாரா ஸ்ரீ-பரமேச்வர-ப்ரீத்யர்த்தம்[1] ப்ராதः ஸந்த்யா-முபாஸிஷ்யே ॥ (மாத்யான்ஹிகம் கரிஷ்யே ॥ ஸாயம் ஸந்த்யா-முபாஸிஷ்யே ॥

(4) ஸங்கல்பம்—(தெளிந்த நீர்மானம்): (மம உபாத்த) என்னுல் அடையப்பட்ட (ஸமஸ்த-துரித) எல்லாப் பாவங் களையும் (க்ஷயத்வாரா) நசிக்கச் செய்வதின் மூலம் (பர-மேச்வர-ப்ரீத்யர்த்தம்) பகவானுடைய அருளுக்குப் பாத் திரமாகும் பொருட்டு (ப்ராதः) காலையில் (ஸந்த்யாம்) ஸந்தியாதேவியை (உபாஸிஷ்யே) உபாசிக்க ஆரம்பிக்கின் றேன்.

[1] ஸ்ரீவைஷ்ணவ ஸம்ப்ரதாயம்—'ஸ்ரீ பகவதாஜ்ஞயா, பகவத் ப்ரீத்-யர்த்தம்.'

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

(5) மார்ஜனம்

பிரயோகம்—'ஓம்' என்று பவித்திர விரலால் தீர்த்தத்தில் எழுதி ஸ்ரீ கேசவாய நம: என்று புருவ மத்தியில் தொடவும்.

முதல் ஏழு மந்திரங்களால் சிரஸில் பவித்திர விரலால் புரோக்ஷித்துக்கொண்டு எட்டாவதால் பாதங்களைத் தொட்டு, ஒன்பதாவதால் மறுபடி சிரஸில் புரோக்ஷித்துக் கொள்ளவேண்டும். பின் 'ஓம் பூர்ப்புவஸ் ஸுவ:' என்று தலையைச் சுற்றிப் பரிஷேசனம் செய்க.

ஒ. (வாங்மன: காயஜான் தோஷான் நவைதான் நவபிர்-தூஹேத்).

நதியில் நின்றுகொண்டு செய்தால் இட-து கையால் ஜலத்தைத் தொட்டுக்கொண்டு வலதால் புரோக்ஷணம்.

ரிஷி - சந்தஸ்-தேவதை—ஆபோஹிஷ்டேதி மந்த்ரஸ்ய, ஸிந்து-த்வீபரிஷி:, தேவிகாயத்ரீச் சந்த:, ஆபோ தேவதா, ப்ரோக்ஷணே விநியோக: || ஸந்தியாவந்தனத்தை விரிவுறச் செய்கையில் ரிஷி-சந்தஸ்-தேவதைகளின் நியாஸத்தையும் எல்லா மந்திரங்களுக்கும் அங்கங்கு கூட்டிக்கொள்க.

வியாக்கியானக் குறிப்பு—யூயம் பவத பாஜயே: ஸுக: ஸம்பாஹிகா யத: | ஹே ஆபோ அஸ்மான் காரயத க்யாதா அன்னதயே தத: || பூஜ்யாய ரமணீயாய ஆத்ம - ஸந்தர்சனாய ச ||

ய: கல்யாணதமோ யுஷ்மத் ரஸோऽஸ்தி மதுராஷ்டயய: தஸ்-யாத்ர ஸ்தானம் குருத ஹே ஆபோऽஸ்மான் ஸுதான் யதா குர்வந்தி மதுரஸ்தானம் மாதரோ வ்ருத்தி-காமுகா:| யுஷ்மத் ரஸோऽஸ்மாஸு பவேத் பாத்ரே வாரிஸ்திதிர்-யதா||

யுஷ்மான் கச்சாம நிதராம் தஸ்மை பாபக்ஷயாய வை யூய - மஸ்மான் ப்ரீணயத யஸ்மை பாப - க்ஷயாய வை | ஹே ஆபோ அஸ்மாம்ச்ச குருத புத்ராதி - ஜனனேச்-வரான் ||

—கண்டராஜதீக்ஷிதர் ஸந்த்யாமந்த்ரார்த்த தீபிகா.

மய:—மய: சப்த: வைதிக நிகண்டே ஸுக - நாமஸு படித: |

ஊர்ஜே—அன்னய ; உபலக்ஷணேந ஸகல வைஷயிக போகேப்ய: |

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

मार्जनम् ॥ ५ ॥

ओं श्रीकेशवाय नमः ॥

आपो॒ हि ष्ठा म॑यो॒ भुवः॑ ॥ १ ॥ ता न॑ ऊ॒र्जे द॑धातन ॥ २ ॥ म॒हे रणा॑य॒ चक्ष॑से ॥ ३ ॥ यो वः॑ शि॒वत॑मो॒ रसः॑ ॥ ४ ॥ तस्य॑ भाजयते॒ह नः॑ ॥ ५ ॥ उ॒श॒तीरि॑व मा॒तरः॑ ॥ ६ ॥ तस्मा॒ अरं॑ गमाम वः ॥ ७ ॥ यस्य॒ क्षया॑य॒ जिन्व॑थ ॥ ८ ॥ आपो॑ ज॒नय॑था च नः ॥ ९ ॥ ओं भूर्भु॑व॒स्सु॒वः॑ ॥ १० ॥ (आत्म-परिषेचनम्)[1]॥

மார்ஜனம் ॥ 5 ॥

ஓம் ஸ்ரீகேசவாய நம: ॥

ஆபோ ஹி ஷ்டா மயோ புவ: (1) தா ந ஊர்ஜே ததாதன (2) மஹே ரணாய சக்ஷஸே (3) யோ வ: சிவதமோ ரஸ: (4) தஸ்ய பாஜயதேஹ ந: (5) உசதீரிவ மாதர: (6) தஸ்மா அரம் கமாம வ: (7) யஸ்ய க்ஷயாய ஜின்வத (8) ஆபோ ஜனயதா ச ந: (9) ஓம் பூர்ப்-புவஸ்-ஸுவ: (10) (ஆத்ம-பரிஷேசனம்)[1]॥

—ரிக்வேதம் 7.6.5 ; தை. ஆரண்யகம் 10.1

[1] ரிக்வேதிகளுக்கும் இதுவே மந்திரம். ஸாமவேதிகளுக்கும் காலையிலும் மாலையிலும் இதுவே மந்திரம் ; பகலில் பின்வருமாறு கூட்டிக் கொள்ள வேண்டும்.

தரத்ஸமேத்-யேதேஷாம் வாமதேவரிஷி:, காயத்ரீச்சந்த:, ஸோமோ தேவதா ॥

ஓம் தரத்ஸமந்தீ தாவதி । தாரா ஸுதஸ்யாந்தஸ: । தரத்ஸமந்தீ தாவதி ॥ உஸ்ரா வேத வஸூநாம் । மர்த்யஸ்ய தேவவ்யவஸ: । தரத்ஸ மந்தீ தாவதி ॥ த்வஸ்ரயோ: புருஷந்த்யோ: । ஆ ஸஹஸ்ராணி தத்மஹே । தரத்ஸமந்தீ தாவதி ॥ ஆ யயோ ஸ்த்ரிம்சதம் தநா । ஸஹஸ்ராணி ச தத்மஹே । தரத்ஸ மந்தீ தாவதி ॥

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

தாதன - தாரயத ; மஹே - பூஜ்யாய ; ரணுய - ரமணீ-யாய ; சஷுஸே - ஆத்ம - தர்சனுய (அன்யதா ஜீவனம் வ்ருதா இத்யபிப்ராய:) ; பாஜயத - பாத்ரயத, ஸ்தானம் குருத ; உசதி: உசத்ய: - புத்ர-வ்ருத்தி-காமயமானு: ; அரம்-அலம் நிதராம் ; ஜின்வத - ப்ரீணயத ; ரஷாய-நிவா-ஸாய ; ஜனயத—புத்ராதி - ஜனன - ஸமர்த்தான் குருத, ஜ்ஞான - ஆனந்தாதின் ப்ராபயத.

பௌதிக சாஸ்திரத்தினுல் ஏற்படும் அறிவை மட்டும் கொண்டு பார்ப்பவனுக்கு இயற்கைப் பொருள்களிலும் நிகழ்ச்சிகளிலும் ஆத்ம ஞானிக்குப் புலப்படும் உள்ளொளி விளங்காது. ஒவ்வொரு பொருளுக்கும் 'அதிபூதம், அத்யாத்மம், அதிதைவம்' என்று மூன்று நிலைகள் உண்டு. ஜலம் உடலைச் சுத்தப்படுத்துவது மட்டுமன்று ; உள்ளத்தையும் புனிதமாக்குவது. பூமி உடலுக்குத் தாங்குவது மட்டுமன்று, மனதிற்கும் உவகையூட்டுவது. அதிலுள்ளது பௌதிகசக்தி மட்டுமன்று ; ஆன்மசக்தியும் உளது. இதை யறியும் வரை உலகம் மனிதனுக்குச் சிறை போன்றிருக்கும். வானிலும், மண்ணிலும், நீரிலும், ஒளியிலும், காற்றிலும் கனலிலும் கலந்துறையும் பரம்பொருளைக் காணவே வழிபாடுகள் எல்லாம்.

ஓ. வானுகி மண்ணுகி வளியாகி ஒளியாகி
ஊனுகி உயிராகி உண்மையுமா யின்மையுமாய்க்
கோனுகி யானெனதென் றவரவரைக் கூத்தாட்டு
வானுகி நின்றுயை என்சொல்லி வாழ்த்துவனே.

—மாணிக்கவாசகர்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

(5) மார்ஜனம்--(புரோக்ஷணத்தால் மந்த்ர - ஸ்நானம்) : (ஓம் ஸ்ரீ கேசவாய நம:) ஓம் ஸ்ரீ கேசவனுக்கு நமஸ்காரம். (ஆப:) ஜல தேவதைகளாகிய நீங்கள் (மயோ புவ:) உயர்ந்த சுகத்துக்குக் காரணமாக (ஷ்ட்டாஹி = ஸ்த்தாஹி) இருக்கிறீர்கள் என்பது பிரசித்தம். (தா:) அப்படிப்பட்ட நீங்கள் (ந:) எங்களுக்கு (மஹே) மகிமை பொருந்தியதும் (ரணய) ரமணீயமானதுமான (சக்ஷஸே) ஞானக் கண்ணின் பொருட்டு (ஊர்ஜே) போஷணீய (ததாதன) அளியுங்கள். (வ:) உங்களிடம் (ய:) எந்த சிவ தம:) பரம மங்களமான (ரஸ:) பேரின்பரஸம் உளதோ (தஸ்ய) அதற்கு (இஹ) இங்கேயே (ந:) எங்களை (உசதீ:) அன்பு சுரக்கும் (மாதர: இவ) தாய்மார்களைப்போல் (பாஜயத) உரியவர்களாக்குங்கள். (யஸ்ய க்ஷயாய) எந்த ரஸத்தை நிலையாக வழங்கும் பொருட்டு (ஜின்வத) நீங்கள் இன்பவடிவாய் விளங்குகிறீர்களோ (தஸ்மை) அந்த ரஸத்திற்காக (வ:) உங்களை (அரம்) மிகவும் ஆர்வத்துடன் (கமாம) நாடுகின்றோம். (ஆப:) ஜலதேவதைகளாகிய நீங்கள் (ந:) எங்களை (ஜநயதா) ஞானத்தால் புனிதமான புனர்ஜன்மமடைந்து விளங்கும்படியும் அருள்வீர்களாக.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

(6) ப்ராசனம்—காலை

பிரயோகம்—உள்ளங்கையில் உளுந்து மூழ்கும் அளவு தீர்த்தத்தை ஏந்தி மந்திரத்தை ஜபித்துப் பின் அதை உட்கொள்க.

ரிஷி - சந்தஸ் - தேவதை—ஸூர்யச்சேத் - யனுவாகஸ்ய அக்னி ரிஷி:, தேவீகாயத்ரீச்சந்த:, ஸூர்யோ தேவதா, ஆத்ம-சுத்த்யர்த்தே ப்ராசனே விநியோக:

வியாக்யானக் குறிப்பு—இதஞ்ச கர்ம-பூதம், மாஞ்சா-ஹங்கார-ரூபம் கர்த்தாரம், ஸ்வயம்-ப்ரகாசே வஸ்துனி, அஹம் அஹங்காராதிஷ்ட்டான-சித்ரூப: ஜுஹோமி தத் ஸர்வம் பஸ்மீகரோமி.

ஓ. மத் ப்ரதிநிதித்வேன இதம் சுளகப்ரமாண - முதகம் ஸூர்யே ஜ்யோதிஷி ஜுஹோமி। ஸ்வாஹா—ஸுஹுதோஸ்மி ॥

—கண்டராஜதீக்ஷிதர் ஸந்த்யாமந்த்ரார்த்த தீபிகா

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

प्राशनम् ॥ ६ ॥

प्रातः—सूर्यश्च मा मन्युश्च मन्युपतयश्च मन्युकृतेभ्यः । पापेभ्यो रक्षन्ताम् । यदह्ना पापमकार्षम् । मनसा वाचा हस्ताभ्याम् । पद्भ्या-मुदरेण शिश्ना । रात्रि-स्तदवलुंपतु । यत्किंच दुरितं मयि । इदमहं माममृत-योनौ । सूर्ये ज्योतिषि जुहोमि स्वाहा ॥ ६. १ ॥[1]

ப்ராசனம் ॥ 6 ॥

ப்ராத:—ஸூர்யச்ச மா மன்யுச்ச மன்யுபதயச்ச மன்யு-க்ருதேப்ய: । பாபேப்யோ ரக்ஷந்தாம் । யத்-ராத்ர்யா பாப-மகார்ஷம் । மனஸா வாசா ஹஸ்தாப்-யாம் । பத்ப்யா-முதரேண சிஞ்ன । ராத்ரிஸ்-ததவ-லும்பது । யத்கிஞ்ச துரிதம் மயி । இதமஹம் மாமம்-ருத-யோநௌ । ஸூர்யே ஜ்யோதிஷி ஜுஹோமி ஸ்வாஹா ॥ 6. 1 ॥[1]

—தை. ஆரண்யகம் 10. 32

[1] இம்மந்திரம் ரிக்வேதிகளுக்கும் யஜுர்வேதிகளுக்கும் பொது. ஸாமவேதிகளுக்கு : 'அஹச்ச மா ஆதித்யச்ச புநாது ஸ்வாஹா' ॥

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

ஓ. யதஹ்னஸ்தே குருதே பாபம் ததஹ்னஸ்தே ப்ரதிமுச்யதே। யத்ராத்ர்யாத் குருதே பாபம் தத்ராத்ர்யாத் ப்ரதிமுச்யதே ॥ —தை. ஆ. 10. 34

ஓ. ஸுர்யே ஸுஷ்டு ஈரயந்தி · ப்ரேரயதீதி வ்யுத்பத்யா ஸர்வ - ப்ராணி - புத்தி - ப்ரேரகே ஜ்யோதிஷி ஸ்வப்ரகாச - சைதன்ய - ஸ்வரூபே பரஸ்மின் ப்ரஹ்மணி। —வேதாந்த ஸித்தாராம சாஸ்திரி

ஓ. ஹிரண்மயே பரே கோசே விரஜம் ப்ரஹ்ம நிஷ்கலம்। தச்சுப்ரம் ஜ்யோதிஷாம் ஜ்யோதிஸ் - தத் - யதாத்மவிதோ வித: —மு. உப. 2. 2. 9

ஓ. ஆர்த்ரம் ஜ்வலதி ஜ்யோதி - ரஹமஸ்மி...அஹமேவாஹம் மாம் ஜுஹோமி ஸ்வாஹா ॥ —தை. ஆ. 1. 70

ஓ. ஜ்ஞானாக்னி: ஸர்வகர்மாணி பஸ்மஸாத் குருதே ததா ॥ —கீ. 4. 37

இது பிராயச்சித்தம். ஓ. 'ப்ராயோ நாம தப: ப்ரோக்தம் சித்தம் நிச்சய உச்யதே। தபோ - நிச்சய - ஸம்யோகாத் ப்ரயாச்சித்த மிதீர்யதே.' —ஹேமாத்ரி

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

(6. 1) ப்ராசனம்—(மந்திரத்தால் ஜபிக்கப்பட்ட தீர்த்தத்தை உட்கொள்ளுதல்) : காலையில்—(ஸூர்யச்ச) அஹனத்தையும் இயக்குவிக்கும் சூரியனும் (மன்யுச்ச) அஹவரையும் அடிமைகொள்ளும் கோபமும் (மன்யு-பதயச்ச) கோபத்தையாளும் தெய்வ சக்திகளும் (மன்யு-க்ருதேப்ய:) கோபத்தாற் செய்யப்பட்ட (பாபேப்ய:) பாவங்களினின்று (மா) என்னை (ரக்ஷந்தாம்) காப்பாற்றட்டும். (ராத்ர்யா) இரவில் (மனஸா) மனத்தாலும் (வாசா) வாக்காலும் (ஹஸ்தாப்-யாம்) கைகளாலும் (பத்ப்யாம்) கால்களாலும் (உதரேண) வயிற்றாலும் (சிச்ன) ஆண்குறியாலும் (யத்) எந்த (பாபம்) பாவத்தை (அகார்ஷம்) செய்தேனோ, (கிஞ்ச) இன்னும் (மயி) என்னிடத்தில் (யத்) எந்த (துரிதம்) பாவம் உண்டோ (தத்) அதையும், (ராத்ரி:) இராத்திரியின் அதிதேவதை (அவலும்பது) நீக்கியருளவேண்டும். (இதம் மாம்) இங்ஙனம் பாவம் நீங்கிய என்னை (அஹம்) நான் (அம்ருதயோநௌ) மோக்ஷத்திற்குக் காரணமாகிய ஸூர்யே ஜ்யோதிஷி) சூரிய வடிவான பரஞ்ஜோதியில் (ஜுஹோமி) ஹோமம் செய்கின்றேன். (ஸ்வாஹா) இந்த ஹோமம் நன்கு அனுஷ்டிக்கப்பட்டதாகவேண்டும்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

ப்ராசனம்—நடுப்பகல்

பிரயோகம்—உள்ளங்கையில் தீர்த்தத்தை ஏந்தி மந்திரத்தை ஜபித்துப் பின் அதை உட்கொள்க.

ரிஷி - சந்த்ஸ் - தேவதை—'ஆப: புனந்து' இத்யனுவாகஸ்ய 'ஆப' ரிஷி: | அனுஷ்டுப் சந்த: | ப்ரஹ்மணஸ்பதிர் தேவதா | ஆத்ம-சுத்த்யர்த்தே அபாம் ப்ராசனே விநியோக: ||

வியாக்கியானக் குறிப்பு—ப்ருதிவீம்—அஸ்மச் சரீரம் வா, கார்ய - காரணயோ - ரபேதாத் | ப்ரஹ்மண:—வேதஸ்ய, பதி:-பாலக:, வேதபுருஷ:, அதவா ஆசார்ய: | ப்ரஹ்மபூதா—நித்யபூதம் ப்ரஹ்ம ||

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

मध्याह्ने—आपः पुनन्तु पृथिवीं पृथिवी पूता पुनातु माम्। पुनन्तु ब्रह्मण-स्पतिर्ब्रह्म-पूता पुनातु माम्। यदुच्छिष्ट-मभोज्यं यद्वा दुश्चरितं मम। सर्वं पुनन्तु मामापोऽसतां च प्रतिग्रहँ स्वाहा॥

॥ ६. २ ॥[1]

மத்யாஹ்னே—ஆப: புனந்து ப்ருதிவீம் ப்ருதிவீ பூதா புனது மாம்। புனந்து ப்ரஹ்மணஸ்பதிர்-ப்ரஹ்ம பூதா புனது மாம்। யதுச்சிஷ்ட-மபோஜ்யம் யத்வா துச்-சரிதம் மம। ஸர்வம் புனந்து மாமாபோ-ஸதாஞ்ச ப்ரதிக்ரஹꣳ ஸ்வாஹா ॥ 6. 2 ॥[1]

—தை. ஆரண்யகம். 10. 30

(6. 2) நடுப்பகலில்—(ஆப:) ஜலதேவதை (ப்ருதிவீம்) தனக்குறைவிடமாகிய பூமியை (புனந்து) புனிதமாக்கட்டும்; (பூதா) அங்ஙனம் புனிதமாக்கப்பட்ட (ப்ருதிவீ) பூமி (மாம்) என்னைப் புனிதமாக்கட்டும். ப்ரஹ்மணஸ்-பதி:) அது வேதத்திற் குறைவிடமாகிய ஆசாரியனையும் (புனந்து) புனிதமாக்கட்டும்; (பூதா) என்றும் புனிதமாயுள்ள (ப்ரஹ்ம) வேதம் (மாம்) என்னை (புனது) புனிதமாக்கட்டும். (உச்சிஷ்டம்) பிறர் உண்ட மிச்சமும் (அபோஜ்-யம்) புசிக்கத் தகாததுமான (யத்) எது (மயா) என்னால் (புக்தம்) புசிக்கப்பட்டதோ (வா) அல்லது (மம) என்னுடைய (யத்) எந்த (துச்சரிதம்) துர்நடத்தை உண்டோ (ஞ்ச) மேலும் (அஸதாம்) கெட்டவர்களிடமிருந்து (ப்ரதிக்ரஹம்) ஏற்றுக்கொண்டது எது உண்டோ (ஸர்-வம்) அவை எல்லாவற்றினின்றும் (மாம்) என்னை (புனந்து) ஜலதேவதை புனிதமாக்கட்டும்—என்று பிரார்த்தித்து (ஸ்வாஹா) புனிதமான என்னைப் பரமாத்ம ஜோதியில் ஹோமம் செய்கின்றேன்.

[1] இம்மந்திரம் ரிக்-யஜுஸ்-ஸாமவேதிகளுக்குப் பொது.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

ப்ராசனம்—மாலை

பிரயோகம்—உள்ளங்கையில் தீர்த்தத்தை ஏந்தி மந்திரத்தை ஜபித்துப் பின் அதை உட்கொள்க.

ரிஷி-சந்தஸ்-தேவதை—அக்னிச்சேத்ய னுவாகஸ்ய ஸௌர்ய ரிஷி: | தேவீ-காயத்ரீ ச்சந்த : | அக்னிர்-தேவதா ! ஆத்ம-சுத்த்யர்த்தே அபாம் ப்ராசனே விநியோக : ||

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

सायंकाले—अग्निश्च मा मन्युश्च मन्युपतयश्च मन्युकृतेभ्यः। पापेभ्यो रक्षन्ताम्। यदह्ना पापमकार्षम्। मनसा वाचा हस्ताभ्याम्। पद्भ्या-मुदरेण शिश्ना। अहस्तदवलुम्पतु। यत्किंच दुरितं मयि। इदमहं माममृतयोनौ। सत्ये ज्योतिषि जुहोमि स्वाहा॥ ६. ३॥[1]

ஸாயங்காலே—அக்னிச்ச மா மன்யுச்ச மன்யுபதயச்ச மன்யு-க்ருதேப்ய:। பாபேப்யோ ரக்ஷந்தாம்। யத-ஹ்ன பாப-மகார்ஷம்। மனஸா வாசா ஹஸ்தாப்-யாம்। பத்ப்யா-முதரேண சிச்ன। அஹஸ்ததவலும்-பது। யத் கிஞ்ச துரிதம் மயி। இதமஹம் மா-மம்ருத-யோநௌ। ஸத்யே ஜ்யோதிஷி ஜுஹோமி ஸ்வாஹா॥ 6. 3॥[1]

—தை. ஆரண்யகம். 10. 31

[1] ஸாமவேதிகளுக்கு: ராத்ரிச்ச மா வருணச்ச புநாது ஸ்வாஹா.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

வியாக்கியானக குறிப்பு—மன்யு: மனனசீலம் அந்த:கர-ணம், ஸர்வப்ரவ்ருத்தி - நிவ்ருத்தி - ஹேது: । க்ரோத இத்-யேகே ।

—பட்டபாஸ்கரர்

ஓ. அபிதோகத: அக்னிரிதி வ்யுத்பத்யா அக்னிசப்தேன ஸர்வகதம் பரம்-ப்ரஹ்மாபிஹிதம் । ஸத்ய-சப்தேனபி காலத்ரயாபாத்யம் பரம்ப்ரஹ்மைவாபிஹிதம், ஸத்யம் ஜ்ஞானம் ப்ரஹ்மேதி ச்ருதே: ॥

—வேதாந்தி ஸீதாராம சாஸ்திரி

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

(6. 3) **ஸாயங்காலத்தில்**—(அக்னிச்ச) அக்கினியும் (மன்யுச்ச) அனேவரையும் அடிமைகொள்ளும் கோபமும் (மன்யுபதயச்ச) கோபத்தையாளும் தெய்வ சக்திகளும் (மன்யுக்ருதேப்ய: பாபேப்ய:) கோபத்தாற் செய்யப்பட்ட பாவங்களினின்று (மா) என்னை (ரக்ஷந்தாம்) காப்பாற்றட்டும். (அஹ்ன) பகலில் (மனஸா) மனத்தாலும் (வாசா) வாக்காலும் (ஹஸ்தாப்யாம்) கைகளாலும் (பத்ப்யாம்) கால்களாலும் (உதரேண) வயிற்றாலும் (சிச்ன) ஆண்குறியாலும் (யத் பாபம்) எந்தப் பாவத்தை (அகார்ஷம்) செய்தேனோ, (இஞ்ச) இன்னும் (மயி) என்னிடத்தில் (யத் துரிதம்) என்ன பாவம் உண்டோ, (தத்) அதையும், (அஹ:) பகலின் அதிதேவதை (அவலும்பது) நீக்கியருள வேண்டும். (இதம் மாம்) இங்ஙனம் பாவம் நீங்கிய என்னை (அஹம்) நான் (அம்ருதயோநௌ) மோக்ஷத்திற்குக் காரணமாகிய (ஸத்யே ஜ்யோதிஷி) முக்காலத்தும் ஸத்தியமாய் விளங்கும் பரஞ்ஜோதியில் (ஜுஹோமி) ஹோமம் செய்கின்றேன். (ஸ்வாஹா) இந்த ஹோமம் நன்கு அனுஷ்டிக்கப்பட்டதாக ஆகவேண்டும்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

(7) புனர்மார்ஜனம்

பிரயோகம்—முதல் 'தத்க்ராவ்ண்ண' என்ற மந்திரங்களாலும், பின் 'ஆபோஹிஷ்டா' முதல் ஏழு மந்திரங்களாலும் பவித்திர வீரலால் சிரசில் புரோக்ஷித்துக் கொண்டு, அடுத்த மந்திரத்தால் பாதங்களைத் தொட்டுக் கடைசியில் 'ஆபோ ஜனயதா ச ந:' என்று தலையைச் சுற்றிப் பரிஷேசனம் செய்க.[1]

ரிஷி-சந்தஸ்-தேவதை—'தத்க்ராவ்ண்ண' இதி மந்த்ரஸ்ய வாமதேவ ரிஷி:। அனுஷ்டுப் சந்த:। தத்க்ராவா தேவதா ॥ ஆபோஹிஷ்டேதி மந்த்ரஸ்ய ஸிந்துத்வீப ரிஷி:। தேவீ காயத்ரீச்சந்த:। ஆபோ தேவதா ப்ரோக்ஷணே விநியோக:॥

ஆந்திர பாடம்—பின் வரும் நாலு மந்திரங்களும் புனர்மார்ஜனத்தில் சேர்த்து ஜபிக்கப்படுகின்றன. ஹிரண்ய வர்ண: சுசய: பாவகா யாஸ்ஜாத: கச்யபோ யாஸ்த்விந்த்ர:। அக்னிம் யா கர்ப்பம் தத்ரே விருபாஸ்-தா ந ஆப: சஸ்யோநா பவந்து ॥ 1 ॥ யா ஸூர்யா ராஜா வருணே யாதி மத்யே ஸத்யாந்ருதே அவபச்யம் ஜநாநாம்। மதுச்சுத: சுசயோ யா: பாவகாஸ் தா ந ஆப: சஸ்யோனுபவந்து ॥ 2 ॥ யாஸாம் தேவா திவி க்ருண்வந்தி பக்ஷம் யா அந்தரிக்ஷே பஹுதா பவந்தி। யா: ப்ருதிவீம் பயஸோந்தந்தி சுக்ராஸ் தா ந ஆப: சஸ்யோ நா பவந்து ॥ 3 ॥ சிவேந மா சக்ஷுஷா பச்யதாப: சிவயா தனுவோபஸ்ப்ருசத த்வசம் மே। ஸாவாஸ் அக்னீரப்ஸுஷதோ ஹ்ருவேவோ மயி வர்ச்சோ பலமோஜோ நிதத்த ॥ 4 ॥

[1] ரிக்வேதிகளுக்கு—புனர்மார்ஜனத்துக்குப் பின் கையில் தீர்த்தம் ஏந்தி 'ருதஞ்ச' எனும் மந்திரத்தால் ஜபித்து, தீர்த்தத்தை முகர்ந்து தென்மேற்கு (நிருருதி) திசையில் விடுவது சிலர் ஸம்பிரதாயம்.

ருதஞ்சேதி மந்த்ரஸ்ய அகமர்ஷண ரிஷி:। அனுஷ்டுப் சந்த:। பாவவ்ருத்த: பரமாத்மா தேவதா। பாப - புருஷ விஸர்ஜனே விநியோக:॥

ருதஞ்ச ஸத்யஞ் சாபீத்தாத் தபஸோऽத்யஜாயத। ததோ ராத்ரிரஜாயத ததஸ் - ஸமுத்ரோ அர்ணவ:॥ ஸமுத்ரா - தர்ணவா - ததி ஸம்வத்வரோ அஜாயத। அஹோ - ராத்ராணி விததத் விச்வஸ்ய மிஷதோ வஸீ। ஸூர்யா சந்த்ரமஸௌ தாதா யதாபூர்வ - மகல்பயத்। திவஞ்ச ப்ருதிவீஞ் சாந்தரிக்ஷ - மதோ ஸ்வ:॥

ஆந்திரர்கள் இங்கு பின்வரும் மந்திரத்தை உபயோகிக்கின்றனர்—த்ருபதாதிவேன்-முமுசானா:। ஸ்விந்ந: ஸ்நாத்வீ மலாதிவ। பூதம் பவித்ரேணே வாஜ்யம்। ஆப: சுந்தந்து மைனஸ:॥

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

पुनर्मार्जनम् ॥ ७ ॥

आचमनम् ॥ मार्जनम् ॥

दधिक्राव्णो अकारिषम् । जिष्णो-रश्वस्य वाजिनः । सुरभि नो मुखाकरत । प्रण आयूँषि तारिषत् ॥

आपो हि ष्ठा मयो भुवः । ता न ऊर्जे दधातन । महे रणाय चक्षसे । यो वः शिवतमो रसः । तस्य भाजयतेह नः । उशती-रिव मातरः । तस्मा अरं गमाम वः । यस्य क्षयाय जिन्वथ । आपो जनयथा च नः ॥

ओं भूर्भुवस्सुवः ॥ (आत्म-परिषेचनम्) ॥

புனர்மார்ஜனம் ॥ 7 ॥

ஆசமனம் ॥ மார்ஜனம் ॥

ததிக்ர்ராவ்ண்ணோ அகாரிஷம் । ஜிஷ்ணோ-ரச்வஸ்ய வாஜிந: । ஸுரபி நோ முகாகரத் । ப்ரண ஆயூꣳஷி தாரிஷத் ॥

—தை. ஸம்ஹிதை 1. 5-11

ஆபோஹிஷ்டா மயோ புவ: । தா ந ஊர்ஜே ததா-தந । மஹேரணாய சக்ஷஸே । யோ வ: சிவதமோ ரஸ: । தஸ்ய பாஜயதேஹ ந: । உசதீரிவ மாதர: । தஸ்மா அரங்கமாம வ: । யஸ்ய க்ஷயாய ஜின்வத । ஆபோ ஜனயதா ச ந: ॥

ஓம் பூர்ப்புவஸ்ஸுவ: ॥ (ஆத்ம-பரிஷேசனம்) ॥

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

வியாக்கியானக் குறிப்பு—

ஓ. தத்விக்ராவா ரவிர்-வஹ்நிர்-தத்விக்ராமதி யஜ்ஜகத் |
ஜய-வ்யாப்தி ஜவைர்-யோகாத்-ஜிஷ்ணு-ரச்வஸ்ய |
வாஜிந: ||
அகாரிஷம் ஸ்துதிம் குர்யாம் தஸ்ய ஸம்பந்தினீம் ததா |
ஸுரபிணி ஸுகந்தானி முகானி ஸ கரோது ந: ||
ப்ரதாரிஷத் ப்ரதத்யாச்ச பூர்ணன்யாயூம்ஷி ந: ப்ரபு: ||
தத்வி:—தாரக: | முகா:—முக்யானி கர்மாணி |
ததத்—க்ராமதி, ஜகந்தீதி, தத்விக்ராவா பரமாத்மா ||
வாஜிந: (வேகவத:)—ஓ. 'அபாணி-பாதோ ஜவனே க்ர-
ஹீதா'.
ஓ. ஸர்வத: பாணிபாதம் தத் ஸர்வதோஉக்ஷி சிரோமுகம் ||
—கீ. 13. 13

ஸுரபி—உலகப் பேச்சால் துர்க்கந்தம் வீசும் வாய் உத்த மனைத் துதிப்பதால் ஸுகந்தம் உடையதாகவேண்டும். அவ்வாறே எல்லாக் கருமங்களும் ஸத்வாஸனை உடைய தாகவேண்டும்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

(7) புனர்மார்ஜனம்—(மீண்டும் புரோக்ஷணத்தால் மந்த்ர ஸ்நாநம்): (தஷிக்ராவ்ண): அனேத்துலகத்தையுந் தாங்குப வனும் ஆள்பவனும் அளப்பவனும் (ஜிஷ்ணோ:) ஜயசீல னும் (அச்வஸ்ய) ஸகல வித்தைகளுக்கும் ஆதாரமான ஹயக்ரீவ வடிவமெடுத்தவனும் (வாஜிந:) வேகவானு மாகிய பரம புருஷனுக்கு (அகாரிஷம்) வந்தனம் செய்கின் றேன். (ந:) நம்முடைய (முகா:) முகத்தையும் மற்ற இந்திரியங்களையும் (ஸுரபி) நன்மணம் உடையவைகளாக (கரத்) அவர் செய்தருளவேண்டும். (ந:) நம்முடைய (ஆயூம்ஷி) ஆயுளை (ப்ரதாரிஷத்) இடையூறு இல்லாமற் காக்கவேண்டும். (ஆபோஹிஷ்ட்டா ..... ஜநயதா ச ந:) ஜல தேவதைகள் ..... நம்மை ஞானத்தால் புனிதமான புனர் ஜன்மம் அடைந்து விளங்கும்படி அருள்புரிய வேண்டும்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

(8) அர்க்கியப் பிரதானம்

பிரயோகம்—காலையில் சூரியோதயத்துக்குமுன் கிழக்கு நோக்கி நின்றுகொண்டு, மந்திரத்தை ஜபித்துக் குதிக்காலில் சிறிது தூக்கி, இரண்டு கைகளிலும் நிறைய ஜலம் எடுத்து உயர்த்தி, மூன்று தடவை அர்க்கியம் விடவேண்டும். நடுப்பகலில் வடக்கு முகமாய் நின்று கொண்டு இரண்டு தடவை அர்க்கியம். மாலையில் சூரியாஸ்தமனத்துக்கு முன் மேற்கு நோக்கி உட்கார்ந்துகொண்டு மூன்று தடவை அர்க்கியம். ('காணுமல், கோணுமல், கண்டு' என்பது பழமொழி).

கட்டைவிரல் மற்ற விரல்களுடன் சேர்ந்தால் அது ராக்ஷஸமுத்திரையாகையால் கட்டைவிரல் சேராமல் மற்ற இரு கைவிரல்களையும் சேர்த்து நதியிலோ தடாகத்திலோ அர்க்கியப் பிரதானம் செய்தல் சிறந்தது. வீட்டில் பாத்திரத்தை வைத்துக்கொண்டு செய்யும்போது இடது கைக் கட்டைவிரல் ஆள்காட்டிவிரல் இரண்டிற்கும் நடுவில் பாத்திரத்தை வைத்துக்கொண்டு அத்துடன் வலது கையைச் சேர்த்து இரு கைகளாலும் அர்க்கியம் விடுதல் சிறந்தது.

ரிக்வேதிகள்—மூன்று வேளைகளிலும் நின்று கொண்டே மூன்று அர்க்கியங்கள் விடுவது ஸம்பிரதாயம். (ஒ. திஷ்ட்-டன் அர்க்க்யத்ரயம் தத்யாத் த்ரிஷு காலேஷு பஹ்வ்ருச: ||)

ரிஷி - சந்தஸ் - தேவதை—அர்க்க்ய - ப்ரதான - மந்த்ரஸ்ய விச்வாமித்ர ரிஷி: | காயத்ரீ ச்சந்த: | ஸவிதா தேவதா | அர்க்க்ய-ப்ரதானே வினியோக: ||

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

अर्घ्य-प्रदानम् ॥ ८ ॥

ओं भूर्भुव॒स्सुवः॑ । तत् स॑वि॒तु-र्वरे॑ण्यं॒ भर्गो॑ दे॒वस्य॑ धीमहि । धियो॒ यो नः॑ प्रचो॒दया॑त् ॥

(प्रातः—३ ॥ मध्याह्ने—२ ॥ सायं—३ ॥)

அர்க்ய-ப்ரதானம் ॥ 8 ॥

ஓம் பூர்ப்புவஸ்ஸுவ: । தத் ஸவிதுர்-வரேண்யம் பர்க்கோ தேவஸ்ய தீமஹி । தியோ யோ ந: ப்ரசோ-தயாத் ॥ (ப்ராத:—3 ॥ மத்யாஹ்னே—2 ॥ ஸாயம்—3 ॥)

—ரிக்வே. 3.62.10; ய.வே. (தை.ஆ.) 35.9; ஸாமவே. 1462

ஆந்திரபாடம்—ஆந்திரர்களும் மற்றும் சிலரும் உச்சிக் காலத்தில் பின்வரும் ஹம்ஸவதீ மந்திரத்தால் ஒரு முறையும் காயத்ரீயால் ஒரு முறையுமாக இரண்டு அர்க்கியங்கள் கொடுக்கின்றனர். காலை மாலைகளில் காயத்ரியாலேயே மூன்று அர்க்கியங்களைக் கொடுக்கின்றனர்.

ஹம்ஸவதீ மந்த்ரம்—ஹம்ஸ: ஶுசிஷத்-வஸு-ரந்தரிக்ஷஸத்-ஹோதாவேதிஷ-ததிதிர்-துரோணஸத் । ந்ருஷத்வரஸத்-ருதஸத்-வ்யோமஸ-தப்ஜா கோஜா ருதஜா அத்ரிஜா ருதம் ப்ருஹத் ॥

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

வியாக்கியானக் குறிப்பு—

